REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✯ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 23உ வெள்ளி (6—5—55) ★ ★ வெளியூர்: சித்திரை 24உ சனி (7—5—55) [இதழ் 278

ஆண் -- பெண் சமத்துவம்!

"'சம உரிமை' காரணமாக விவாக ரத்து செய்யப்படும் மனைவியர், தமக்கு ஜீவனாம்சம் தர வேண்டுமென ஆண்கள் ஒரு புறத்தினால், தொழிற்சாலை சட்டத்தின்கீழ் பெண்களுக்குத் தரப்படும் பிரசவ லீவும் தங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று என்றாவது கேட்கக்கூடும்," என்று, பண்டித தாக்கூர்தாஸ் பார்கவா, மக்கள் சபையில், இந்து திருமண மசோதா விவாதத்தின் போது கூறினர்.

அதனை ஆதரிக்கும்வகையில் பண்டித கிஷின் சந்த் சர்மா குறுக்கிட்டு, "தற்போது ஆண்கள் பெண்களாக மாறுவதும், பெண்கள் ஆண்களாக மாறிவிடுவதும் நடைபெற்று வருகின்றமையால், இவ்வாறு கேட்பது சாத்தியமே," என்று கூறினர்.

மே. ஜெர்மனி விடுதலை பெறுகிறது

வல்லரசுகளின் பத்தாண்டு ஆதிக்கம் அகலுகிறது!

பான் (மேற்கு ஜெர்மனி) மே 5—

"உலகத்தையே 'உயர்வு மிகுந்த' ஆரிய இனத்தவர்தான் ஆளவேண்டும்," என்று ஆதிக்க வெறிகொண்டு கூவியலைந்த அடால்ப் இட்லரின் பேராசைக் கோட்டைகள் பத்து ஆண்டுகளுக்கு முன் தகர்த்தெறியப்பட்டன.

இட்லரின் மண்ணாசை மண்ணாகிப் போவதற்காக எழுந்த, உலகத்தையே உலுக்கி உருக்குலைத்த உயிரும் உடைமைகள் பலவும் கொள்ளை கொண்ட இரண்டாம் உலகப் பெரும் போரின் முடிவில், 'போஸ்ட்டாம்' ஒப்பந்தங்களின்படி ஜெர்மனி, 'மேற்கு—கிழக்கு' என்று துண்டாடப்பட்டு, கிழக்கு ஜெர்மனி ரஷ்யர்கள் ஆதிக்கத்திலும், மேற்கு ஜெர்மனி அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் ஆதிக்கத்திலும் வரலாயின.

'இரண்டு ஜெர்மனிகளையும் ஒன்றுசேர்க்க வேண்டும்,' என்ற எண்ணம் கருக்கொண்டிருந்த போதிலும் பல்வேறு காரணங்களால், அது செயலாக உருப்பெற முடியாதிருக்கிறது.

மேற்கு ஜெர்மனியில் தாங்கள் கொண்டிருக்கும் ஆதிக்கத்தை 'கைவிடு'வதென்றும், மீண்டும் மேற்கு ஜெர்மனி படைபலம் பெற்றுக்கொள்ள அனுமதிப்பதென்றும சென்ற ஆண்டு இறுதியில் உருவான 'பாரிஸ் ஒப்பந்தங்கள்' கூறின.

அந்த ஒப்பந்தங்கள் பல்வேறு சிக்கல்களுக்கிடையில் சம்மந்தப்பட்ட நாடுகளின் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டன. இப்போது அந்த ஒப்பந்தங்களின்படி, மேற்கு ஜெர்மனியில் வாழும் 4 கோடியே 9 லட்சம் மக்களின் அரசாங்கம், இனி சட்டங்கள் இயற்றவும், ஒப்பந்தங்களில் கையெழுத்திடவும், மேற்கு நாடுகளின் பாதுகாப்பிற்காக இராணுவம் சேர்க்கவுமான உரிமையைப் பெறுகின்றது.

என்றாலும், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் துருப்புகள் அங்கு இருக்கத்தான் செய்யும். அவை, ஆதிக்கம் புரியும் அதிகாரம் பெற்றவையாயில்லாவிடினும், அவற்றின் நிர்வாகச் செலவை தொடர்புடைய வல்லரசுகளே மேற்கொள்ளும்.

இராணுவம் சேர்ப்பது என்ற 'சுதந்திரம்' மேற்கு ஜெர்மனிக்குக் கிடைத்திருப்பினும் 'இயந்திரத் துப்பாக்கி'கள் தவிர, வேறெவ்வித ஆயுத உற்பத்தியிலும் அரசாங்கம் ஈடுபட முடியாதாம்.

அமெரிக்கா ஏற்கனவே 'பாரிஸ் ஒப்பந்தங்'களுக்கு அங்கீகாரமளித்துவிட்டது.

இன்று பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் சான்சலரான டாக்டர் கான்ரட் அடினுரிடம், பாரிஸ் ஒப்பந்தங்கள் அங்கீகாரம் பற்றிய பத்திரங்களையும் பத்து ஆண்டு ஆதிக்கம் ஒழிவதற்கான பத்திரங்களையும் தந்துவிட்டனர் என்று தெரிகிறது.

பான் நகரில் உள்ள அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் 'ஹை கமிஷன்' அலுவலகங்கள் இன்று முதல் தூதுவராலயங்களாகிவிடுகின்றனவாம்.

இந்த 'சுதந்திர விழா' ஆர்ப்பாட்டமோ ஆடம்பரமோ இன்றி எளிய முறையில் நடைபெற்றிருக்கிறது.

1,300 தொழிலாளர் கைது!

கடந்த 3 வார காலமாக அமிருதசரசில் நடைபெற்றுவரும் தொழிலாளர் கிளர்ச்சியின் காரணமாக இதுவரையிலும் 1,300 தொழிலாளருக்கு மேல் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தற்போது 900 பேர் சிறையில் இருப்பதாகவும், 400 பேர் தொலைதூரங்களில் விடுவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

15,000 ஆலைத் தொழிலாளர் மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தம் இன்னும் நீடித்துக்கொண்டு வருகிறதாக அறிவிக்கப்படுகிறது

ஆப்கனிஸ்தானில் நெருக்கடி நிலைமை?

மக்கள் படை திரட்டப்படுகிறது

புதுடில்லி, மே. 5—

ஆப்கனிஸ்தான் முழுமையிலும் அவசர கால நெருக்கடி நிலைமை பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறதாம்.

வயதுவந்த ஆப்கன் மக்கள் அனைவரும், 48 மணி நேரத்திற்குள், அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று நாட்டைப் பாதுகாக்க தங்களை ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

நாட்டின் எதிர்ப்பு சக்திகளை ஒடுக்கவும், ஆப்கனிஸ்தானின் ஒற்றுமையைப் பலப்படுத்தவும் இந்த ஏற்பாடு என்று காபூல் வானொலி நிலையம் அறிவித்ததாம். இச்செய்தியை பாகிஸ்தான் வானொலி தெரிவித்திருக்கிறது.

மிகவும் வருத்தத்துடன் கராச்சியில் உள்ள ஆப்கன் தூதுவரை திருப்பி அழைத்துக்கொள்ள முடிவு செய்திருப்பதாக ஆப்கனிஸ்தான் அறிவித்ததாம்.

ஆப்கன் பிரதமர் சர்தார் தௌலத்கான், பக்தூனிஸ்தானுக்கு ஆப்கன் அளிக்கும் கோரிக்கையை ஆதரித்து உதவியளித்தார் என்று பாகிஸ்தான் வானொலி கூறியது.

"பக்தூனிஸ்தானை அழிக்கவோ அல்லது ஒடுக்கவோ எடுக்கப்படும் எந்த நடவடிக்கையையும் ஆப்கனிஸ்தான் பொறுத்துக் கொள்ளாது," என ஆப்கன் பிரதமர் கூறினார் என்று தெரிகிறது.

புதுடில்லியிலிருந்து கிடைத்த செய்திகளின்படி காபூல் வானொலி நிலையம் அவசர நிலைமை பற்றி ஏதும் அறிவித்ததாகத் தெரியவில்லை.

நாட்டின் பாதுகாப்பிற்காக ஆப்கன் பாதுகாப்பு இலாகா படை திரட்ட முடிவு செய்திருக்கிறது என்று அறிவிக்கப்பட்டதாம்.

ஆப்கனிஸ்தானில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் பற்றி தான் ஏதும் பயம் கொள்ளவில்லை என்று பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் அயூப்கான் குறிப்பிட்டிருக்கிறார்.

பொது வேலை நிறுத்தம்; நியாயமற்ற போக்காம்!

கைவிடுமாறு கான்பூர் தொழிலாளருக்கு எச்சரிக்கை

"தற்போது தாங்கள் கையாண்டு வரும் 'நியாயமற்ற' போக்கை கான்பூர் துணி ஆலைத் தொழிலாளர்கள் கைவிட வேண்டும்; இந்தப் போக்கு, பலாத்கார நடவடிக்கைகளில்தான் கொண்டு வந்துவிடும்; ஏற்படுகின்ற தகராறுகளைப் பைசல் செய்ய சட்டவரம்பிற்குட்பட்ட வழிகளையே கையாளவேண்டும்,"

என்று, மத்திய சர்க்கார் தொழிலாளர் நல இலாகா அமைச்சர் கந்துபாய் தேசாய் கூறியிருக்கிறார்.

"பதினொரு ஆலைகள் பாதிக்கப்பட்டவற்றுள், ஒரு ஆலை, எல்லா தொழிலாளருடனும், இன்னொன்று பாதிக்கு மேற்பட்ட தொழிலாளருடனும், மற்றும் 5 ஆலைகள் குறைந்த பேருடனும் வேலை செய்து வருகின்றன இரண்டு ஆலைகளில் மட்டும்தான் மிகக் குறைந்த எண்ணிக்கையில் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். ஒரு ஆலை மட்டும் கதவடைப்புச் செய்திருக்கிறது," என்று மேலும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அவசரப் பிரேரபணையை மக்கள் சபையில் அனுமதிக்குமாறு வற்புறுத்திப் பேசிய கம்யூனிஸ்டு உறுப்பினரான விட்டல் ராவ் பேசுகையில், 'கான்பூரில் 32,000 தொழிலாளரைப் பாதித்துள்ள இந்த வேலை நிறுத்தம் இந்தியா முழுவதிலும் உள்ள ஏழு இலட்சம் துணி ஆலைத் தொழிலாளரிடையே பரவலாம் என்று கூறினராம்.

'அவசரப் பிரேரபணையை அனுமதிப்பதில் பிரயோசனமில்லை' என்று கூறி, அதனை சபாநாயகர் நிராகரித்துவிட்டிருக்கிறார்.

மதுவிலக்கு போலீசார் துப்பாக்கிப்பிரயோகம்

கர்னூல், மே. 5—

மதுவிலக்கு போலீஸ் குழு ஒன்றை மக்கள் கூட்டத்தினர் தாக்கியதின் விளைவாக மதுவிலக்கு சப் - இன்ஸ்பெக்டர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்ட சம்பவம் ஒன்று, கர்னூலுக்கு இருகல் தொலைவிலுள்ள கிராமம் ஒன்றில் நடைபெற்றதாகத் தெரிய வருகிறது.

அக்கிராமத்திலுள்ள ஒரு வீட்டை மேற்படி மதுவிலக்குக் குழுவினர் சோதனையிட்டதில் 12 காலன் கள்ளச் சாராயத்தைக் கைப்பற்றி 12 பேரைக் கைதும் செய்திருக்கின்றனர். இதற்கிடையில் கைது செய்யப்பட்ட அந்த பன்னிருவரையும் மீட்க கிராமத்திலுள்ள பெரும்பான்மையான மக்கள் முயற்சித்து மதுவிலக்குக் குழுவினர்மீது கற்களை வீசினராம்.

இதன் விளைவாக ஒரு போலீஸ்காரர் காயம்பட்டு கீழே விழுந்ததும், மதுவிலக்கு சப்-இன்ஸ்பெக்டர் தற்காப்புக்காகத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருக்கிறார்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்

நவம்பரில் தயாராகிவிடுமாம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் வருகிற நவம்பர் திங்களுக்குள் தயாராகிவிடுமென்று மக்கள் சபையில் மத்திய சர்க்கார் திட்ட மந்திரி குல்ஜாரிலால் நந்தா தெரிவித்திருக்கிறார்.

ஒவ்வொரு மாநில சர்க்கார்களுடனும், மத்திய சர்க்காரின் இலாகாக்களுடனும் அவ்வவைகளின் திட்டங்கள் பற்றி விவாதித்த பின்னரே நகல் தயாரிக்கப்படுமென்றும், அந்த நகல் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

சபைத் தலைவர் சபையிலிருந்து வெளியேற்றம்

ஆஸ்திரேலிய மக்கள் சபையில் சம்பவம்

கான்பெர்ரா, மே 4—

ஆஸ்திரேலிய மக்கள் சபைத் தலைவரான ஆர்ச்சி கமெரான் என்பவர், மலேயாவுக்கு துருப்புகளை அனுப்ப வேண்டுமென்ற சர்க்காரின் திட்டத்தின் மீது நடைபெற்ற விவாதத்தின் போது, சபையைவிட்டே வெளியேற வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர் சபையிலிருந்து வெளியேறும்போது பல உறுப்பினர்கள் கேலியும் கிண்டலும் புரிந்திருக்கின்றனர்.

தொழிற்கட்சியைச் சேர்ந்த எட்வர்ட் வார்ட் என்பவர், தாம் பேசிய இராஜத் துரோகமான வாசகங்களை 'வாபஸ்' பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சபைத் தலைவர் உத்திரவிட்டார்.

அப்போதும் அந்த உறுப்பினர் 'தாம் பேசிக் கொண்டிருக்கையில் தலைவர் அடிக்கடி குறுக்கிடக் கூடாது,' என்று கேட்டுக்கொண்டு தொடர்ந்து பேச ஆரம்பித்தார். தலைவர் அதனைத் தடுத்துவிட்டார். இது சபையில் குழப்பத்தையும், கூச்சலையும் அன்றையத் தினம் உண்டுபண்ணியது.

மறுநாள் தொழிற்கட்சித் தலைவரான டாக்டர் ஹெர்பர்ட் ஈவாட் என்பவர், தொடர்ந்து எட்வர்ட் வார்டு பேசுவதற்கு அனுமதி வேண்டும் எனக் கோரி பிரேரபணைகள் கொண்டு வந்தார். சபைத் தலைவர், தான் ஏற்கனவே அந்த உறுப்பினர் விஷயத்தில் கொண்டுள்ள முடிவை மாற்றிக்கொள்ள இயலாது எனக் கூறி, பிரேரபணைகள் எல்லாவற்றையும் நிராகரித்துவிட்டார்.

உடனே டாக்டர் ஈவாட், தலைவரின் இந்த முடிவை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.

தலைவரின் போக்கிற்கு எதிராக 60 வாக்குகளும், ஆதரவாக 48 - வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 6—5—'55 வெள்ளி

புதிய சலுகைகள்!

மாஞ்செஸ்டர், லங்காஷயர் ஆலை ஆடைகள், உலகச் சந்தை முழுவதிலும் போட்டியின்றி நிரம்பியிருந்த காலம் ஒன்று உண்டு. அது இன்று வெறும் பழங்கதையாகிவிட்டது.

உலகச் சந்தைகளில் பிரிட்டிஷ் ஆலைத் துணிகளுக்கு இருந்துவந்த ஆதிக்கம், முதல் முதலாக ஜப்பான் நெசவாலைப் போட்டியால் வேகமாகச் சரியத் தொடங்கிற்று. அதன் பின்னர், ஜப்பான் போட்டியுடன் இந்திய ஆலைகளின் போட்டியையும் எதிர்நோக்கித் தீர வேண்டிய நிலை பிரிட்டனுக்கு ஏற்பட்டது.

பிரிட்டிஷ் மக்களின் நல்வாழ்விற்கு அதன் மிதமிஞ்சிய தொழில் வளர்ச்சியே பெரிதும் காரணமாக இருந்தபோதிலும், அத்தொழில் வளர்ச்சி உலகச் சந்தைகளையே நூற்றுக்கு நூறு பங்கு நம்பி வாழ வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாகும். இதனால் பிரிட்டிஷ் மக்களின் வளம், உலகச் சந்தை விரிவதையும், சுருங்குவதையும் பொறுத்த ஒரு நிகழ்ச்சியாகிவிட்டது.

சென்ற உலகப் பெரும் போருக்குப் பிறகு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அரசியல் பிடியில் கட்டுண்டு கிடந்த நாடுகளில் சில ஒன்றன்பின் ஒன்றாக அரசியல் துறையில் விடுபட்டன. அவ்வரசியல் விடுதலை, பிரிட்டிஷ் வெளிநாட்டு வியாபாரத்தைக் குறிப்பிடத் தகுந்த அளவு பாதிக்கத் தொடங்கியது. மற்ற துறைகளில் ஏற்பட்ட நெருக்கடி போன்றே, நெசவாலைத் துறையிலும் நெருக்கடி காணத் துவங்கியது.

அதன் விளைவாக மாஞ்செஸ்டர், லங்காஷயர் நெசவாலைகளிடமிருந்து அழுகுரல் கிளம்பியது. சிற்சில ஆலைகளில் ஆட்குறைப்பும், கதவடைப்பும்கூட நிகழலாயின.

இந்தியச் சந்தையில் லங்காஷயருக்கும், மாஞ்செஸ்டருக்கும் இருந்த ஆதிக்கத்தைக் குறித்து, விடுதலைப் போராட்ட காலத்தில், இந்திய ஆலை அரசுகளின் பின்னணி பலத்துடன், காங்கிரஸ் பெருந்தலைவர்கள், அனல் சக்கக் கண்டித்துப் பேசினதும், கூக்குரல் எழுப்பியதும் இன்றும் நமது காதுகளில் ஒலித்துக்கொண்டுதான் இருக்கின்றன. அக்கூக்குரலை மூலபலமாகக் கொண்டு வட இந்தியாவில் நெசவாலைகள் அடுக்கடுக்காக எழுந்தன. பிரிட்டிஷ் இந்திய ஆட்சியாளரிடமிருந்து பாதுகாப்பும், வேறு விதச் சலுகைகளும் அடுத்தடுத்துப் பெற்று, வட இந்திய நெசவாலைகள், தங்களை பலப்படுத்திக் கொண்டன. அதன் எதிரொலியாக, இன்று உலகச் சந்தைகளில் பலவற்றைத் தன தாக்கிக் கொண்டுள்ள நிலைமை, வட இந்திய நெசவாலைகளுக்கு நிலையாக ஏற்பட்டு விட்டிருக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்தில் லங்காஷயர் — மாஞ்செஸ்டர் நெசவாலைத் துணிகளுக்கு இருக்கும் ஆதிக்கத்தை எதிர்க்கும் அறிகுறியாகவே, கதர்த் தொழில் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஆலைத் துணிகளுக்கு எதிராகக் கிளம்பிய காங்கிரஸ் எதிர்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, வடநாட்டில் நெசவாலைகள் பெருக்கெடுத்தது போன்றே, கதர்த் தொழில் நமது திராவிடத்தில் செல்வாக்குப் பெற்றது.

நெசவாலை பெருக்கத்தால் வடநாட்டில் பலர் வேலை பெறவும், சுமாராக வாழ்க்கைத்தரம் உயரவுமான நன்னிலை உருவாயிற்று. ஆனால் திராவிடத்திலோ, கதர் பெருக்கத்தால் வேலையற்றோர் கடல் கடந்து செல்லவும், மற்ற மக்களின் வாழ்க்கைத்தரம் தேயவும் அல்லது தேங்கவுமான நிலை உருவெடுத்தது. நிற்க,

எந்த லங்காஷயர், மாஞ்செஸ்டர் ஆலைத் துணிகளை எதிர்த்து இந்தியாவால் கிளர்ச்சி செய்யப்பட்டதோ, எந்த ஆலைத் துணிகளின் இறக்குமதிக்குத் தடை விதிக்க வேண்டும் அல்லது கட்டுப்படுத்த வேண்டும் என்று இந்தியாவால் கோரப்பட்டதோ, அதே இந்தியாவின் ஆலைத் துணிகளுக்குத் தடை விதி அல்லது கட்டுப்படுத்து—என குமுறக்கூடிய கட்டாயம்—அதுவும், லங்காஷயருக்கும், மாஞ்செஸ்டருக்கும் ஏற்பட்டு இருக்கிறது. இந்திய நெசவாலைகளின் போட்டிக்குத் தாக்கு பிடிக்க முடியாமல் மூச்சுத் திணறவும், அதை வெளிப்படையாகக் கூறி பரிகாரம் தேடும்படி தமது அரசாங்கத்தை நெருக்கவுமான கட்டாயம் லங்காஷயர் ஆலைகளுக்கு ஏற்பட்டிருப்பது வியப்புக்குரியதல்ல; நுணுக்கமான ஆராய்ச்சிக்குரியதாகும்.

இதுவரையில் லங்காஷயரிலிருந்து இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டுவந்த பலரகத் துணிகளுக்கும் இருந்துவந்த 60 சதவிகித இறக்குமதி வரியில் 15 முதல் 20 சத விகிதம் வரையில் கணிசமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இம்முடிவு, லங்காஷயருக்குத் திருப்தியளிக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த இறக்குமதி வரி குறைப்பை இங்கிலாந்து பாராட்டியும் விட்டது.

லங்காஷயர் ஆலை நெசவிற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்காக, அத்துணிகளின் மீது விதிக்கப்பட்டிருந்த கொள்முதல் வரியை இங்கிலாந்து அரசாங்கம் விலக்கிவிட்டிருக்கிறது. அதே நேரத்தில் அமெரிக்காவும், பிரிட்டிஷ் ஆலை நெசவை நெருக்கடியிலிருந்து கைதூக்கிவிட முன்வந்திருக்கிறது.

அதாவது 50 இலட்சம் டாலர் மதிப்புடைய பஞ்சை பாகிஸ்தானுக்கு உதவுவது என்ற பெயரில், லங்காஷயருக்குக் கொடுக்கவும், அதற்குப் பதிலாக அதே மதிப்புடைய ஆலைத் துணியை பாகிஸ்தானுக்கு லங்காஷயர் கொடுக்க வேண்டும் எனவும் ஒரு புது வகை ஏற்பாட்டை அமெரிக்கா அறிவித்திருக்கிறது. இந்தப் புது ஏற்பாட்டினால் இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் கொள்முதல் செய்துவரும் ஆலைத் துணியில் பெருங் குறைவு ஏற்படாது என்றாலும், எதிர்காலத்தில் இது இந்திய நெசவாலைத் தொழிலைப் பாதிக்கக் கூடும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே.

இப்புதுமை ஏற்பாட்டை பாகிஸ்தான் அளவுடன் நிறுத்திக்கொள்ளாது, மற்ற ஆசிய நாடுகள் வகையிலும் மேற்கொள்ள அமெரிக்கா முனையுமானால், அத்தகு நிலையில் இந்திய நெசவாலைத் தொழில் பலமான நெருக்கடிக்குப் பலியாகும் என நிச்சயமாகக் கூறலாம்.

அச்சூழ்நிலையில் இந்தியப் பேரரசு என்ன செய்யப் போகிறதோ?

இந்தியாவின் இறக்குமதி வரி குறைப்பும், இங்கிலாந்தின் கொள்முதல் வரி விலக்கும், அமெரிக்காவின் புதுமை ஏற்பாடும், லங்காஷயர் மாஞ்செஸ்டர் நெசவாலைத் தொழிலை, ஏற்பட்டிருந்த தற்கால நெருக்கடியிலிருந்து காப்பாற்றியுள்ளன. பேராபத்திலிருந்து தப்பிய இங்கிலாந்து நெசவாலைகள் உண்மையில் மகிழும் என்பதில் சந்தேகமில்லை.

நாகார்ஜுனா திட்டம்

தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய ஒன்று என்று வர்ணிக்கப்படுவதும், 'நந்திகொண்டா திட்டம்' என்ற பெயரிலிருந்து 'நாகார்ஜுனா திட்டம்' என்று அழைக்கப்பட இருப்பதுமான திட்டத்திற்கு ரூ. 12½ கோடி செலவிட வேண்டியிருக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்திட்டம், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. பாக்கியுள்ள வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக சுமார் 77 கோடி ரூபாய் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்படுமாம்.

குறிப்பிட்டுள்ள கால அளவில் திட்டத்தை முடிப்பதற்காக ஐதராபாத், ஆந்திர அதிகாரிகளைக் கொண்ட 'போர்டு' அமைக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

கம்யூனிஸ்டுதலைவர்களுக்கு அழைப்பு

ரஷ்ய, சீன நாடுகளுக்குச் செல்கின்றனர்

ஐதராபாத், மே 5—

இங்குள்ள கம்யூனிஸ்டு தலைவர்களுக்கு பல கம்யூனிஸ்டு நாடுகளிலிருந்து, அங்கு வருகை தரக் கோரி அழைப்புகள் வந்துள்ளதாகத் தெரிகிறது.

பிரபல கம்யூனிஸ்டும் சட்டசபை உறுப்பினருமான மக்தூம் முகைதீன் என்பவர் ஏற்கனவே பிரேக் நகருக்குப் பயணமாகிவிட்டார்; அங்கிருந்து அவர் ஹெல்சிங்கி என்ற இடத்திற்குச் செல்வார் எனத் தெரியவருகிறது

பி. எஸ். தேஷ்பாண்டே, சீனா சென்று கொண்டிருக்கிறார்; அங்கிருந்து அவர் மாஸ்கோ செல்வாராம்.

வேறு பல தலைவர்களுக்கும், போலந்து, ஹங்கேரி, ருமேனியா ஆகிய நாடுகளிலிருந்து அழைப்பு வந்திருக்கிறதாம்.

கசையடி ஒழிகிறது

கசையடியை ஒழிப்பதற்கான மசோதா ஒன்றை உள்நாட்டு மந்திரி பண்டிதபந்த் பாராளுமன்ற மேல் சபையில் கொண்டுவந்திருக்கிறார்.

அமைதியாக நடக்க சூழ்நிலை வேண்டாமா?

தொழில் தகராறுகளைத் தீர்ப்பதில் பண்டிதரின் கருத்து!

'டைம்ஸ் ஆப் இந்தியா' கேள்வி?

"பண்டித நேரு அவர்கள் மே தின விழாவில் குறிப்பிட்டிருப்பது போன்று நாட்டில் ஏற்படும் தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தைகள் கலந்தாலோசித்தல், ஒத்துப் போதல் முதலிய அமைதியான விதிகளை, நாம், நமக்கேற்ற வகையில் வகுத்துக்கொள்ள வேண்டும்.

"ஆனால், அந்த அமைதியான முறைகள் வளர்ந்து இயங்குவதற்கு ஒரு நல்ல சூழ்நிலை வேண்டும். தங்களுடைய சமீப காலத்திய நடவடிக்கைகள் அத்தகையதோர் சூழ்நிலையை உருவாக்க பயன்பட்டனவா என்று, சர்க்கார், தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டும்.

"அமிர்தசரசில் கடந்த இரண்டு வாரகாலமாக நடைபெற்று வரும் வேலை நிறுத்தத்தை ஒட்டியும் கான்பூரில் ஆலைகளில் சிக்கனச் சீரமைப்பு அமுல் செய்யப்படுவதின் விளைவாய் உருவாகியுள்ள தகராறை ஒட்டியும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களையும், அவர்களின் தலைவர்களையும் அரசாங்கம் கைது செய்திருக்கிறது.

"ஒரு மாத காலத்திற்கு மேலாக நாட்டில் பத்திரிகைகளே இல்லாமற்செய்கிற அளவுக்கு இங்கிலாந்தில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் போது இங்கிலாந்து சர்க்கார் ஒருவரைக்கூட கைது செய்யவில்லை.

"தாக்குதல் என்று கூறமுடியாவிட்டாலும், நமது சர்க்காரின் கோபமூட்டுகிற போக்கு, இங்கிலாந்து அரசாங்கத்தின் நடவடிக்கையுடன் ஒப்பிடும்போது, வருந்தத் தக்கவகையில், நேர் முரணானதாயிருக்கிறது."

இவ்வாறு, பம்பாயிலிருந்து வரும் 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்ற ஆங்கில தின இதழ் மே 4-ந்தேதிய வெளியீட்டில் எழுதியிருக்கிறது.

வெளிச்சம் போடுகிறார்கள்!

இவ்வாண்டு மார்ச்சு மாதத்தில், சென்னை மாநிலத்தில் மொத்தம் 79 கிராமங்களுக்கு மின்சார வசதி விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

பைகாரா மின்சார உற்பத்தித் திட்டத்திலிருந்து 18 கிராமங்களுக்கும், மேட்டூர் அணை உற்பத்தியிலிருந்து 19 கிராமங்களுக்கும், பாபநாசத்திலிருந்து 23 கிராமங்களுக்கும், சென்னையிலிருந்து 14-கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த மின்சார விஸ்தரிப்பு திட்டத்திற்கு, ரூ. 15,03,588 மதிப்பீட்டுச் செலவாக அனுமதிக்கப்பட்டது. 13,644 மைல் அதிக சக்தி மின்சாரக் கம்பிகளும், 1,52,629 மைல் குறைந்த சக்திக் கம்பிகளும் போடப்பட்டன.

பைகாரா 3-வது கட்ட விரிவு படுத்தும் திட்டம், தென்கன்னட திட்டம், சென்னை இயந்திர விஸ்தரிப்பு ஆகிய திட்டங்கள் முன்னேறி வருகின்றன

பெரியாறு நீர் மின்சாரத் திட்ட வேலை நடைபெற்றுக்கொண்டு வருகிறது. மின்சார நிலையத்திற்குப் (பவர் அவுஸ்) போகும் சாலை வேலை முடிந்து விட்டது.

பைகாரா — கோயம்புத்தூர், நாமக்கல் — சேலம், சிங்காரப் பேட்டை—விழுப்புரம், சிங்காரப் பேட்டை — வேலூர், கோயம்புத்தூர்—மதுக்கரை, மற்றும் பல இணைப்புக் கம்பி போடும் வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

திராவிடத்தில் புகையிலை விளைச்சல்

விரிவுபடுத்த இந்தியப் பேரரசு முடிவு

இந்தியப் பேரரசு, சுமார் 1,50,000 செலவில், ஆந்திராவில் குண்டூர் மாவட்டத்தில் புகையிலை பயிரிடுவதை அதிகரிக்க இரண்டு ஆண்டுத் திட்டம் ஒன்றை மேற்கொள்ள முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

இந்தியாவிலேயே இங்குதான் வர்ஜீனியா சிகரெட் புகையிலை அதிகமாக விளைகிறது.

திட்டத்தின் நோக்கம், புகையிலை பயிரிடுவோரிடை விஞ்ஞான ரீதியாகப் புகையிலை பயிரிடுதல், அறுவடை செய்தல், பதப்படுத்துதல், பாகுபாடு செய்தல் முதலியவை பற்றி அனுபவ ரீதியான அறிவூட்டுவதற்காகத்தான் என்று கூறப்படுகிறது.

அகில உலக சந்தைகளுக்குச் செல்கிற வர்ஜீனியா புகையிலையின் தரத்தை உயர்த்தவும் திட்டம் பயன்படுமாம்.

மத்திய அரசாங்க உணவு, விவசாய இலாகா தயாரித்த இந்தத் திட்டத்தை மாநில அரசாங்க விவசாய இலாகா உடனடியாக நிறைவேற்றும் என்று தெரிகிறது.

முன்பின் யோசனை இல்லாமல்!

சென்னை, மே 5—

எல்லா மாநில சர்க்கார்களும் மின்சாரக் குழு ஒன்று நிறுவி மின்சார இலாகாவின் உற்பத்தி, விநியோக வேலைகளனைத்தையும் அக்குழுவிடம் ஒப்படைக்கவேண்டுமென்பது இந்திய மத்திய சர்க்கார் சட்டம்; ஆனால் மத்திய சர்க்கார், இந்தக் குழு அமைப்பதைத் தள்ளி வைத்துக்கொள்ள பல மாநில சர்க்கார்களுக்கும் அனுமதி தந்துள்ளது. அவ்வாறு சென்னை சர்க்காருக்கு அனுமதித்திருந்த அவகாசம் சென்ற மார்ச்சு திங்களுடன் முடிவடைந்துவிட்டமையால், இப்போது மீண்டும் ஒரு ஆண்டு காலத்திற்கு அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதன் முதலில் மின்சாரக் குழு நியமிக்க முன்வந்து ஒப்புக்கொண்ட மாநிலங்களே இப்போது அக்குழுவினை அமைக்க விரும்பாமல் பின்வாங்குகின்றனவாம். இதனால் இக்குழுக்களை அமைக்கும் பிரச்சினையை மாநில சர்க்கார்களின் விருப்பத்திற்கு விட்டுவிடுமாறு இந்திய சர்க்கார் சட்டத்தைத் திருத்தலாமா என்று கூடச் சிந்திக்கப்படுகிறதாகவும் தெரியவருகிறது.

சர்க்கஸ் விளையாட்டில் விபத்து

ஆலப்புழை, மே 5—

இங்கு நடைபெறும் ஒரு 'சர்க்கசில்' நேற்றிரவு மோட்டார் சைக்கிள் 'ஸ்டண்ட்' நடைபெறும்போது ஏற்பட்ட விபத்தினால் 9 பேர் காயமடைந்தனர் என்றும், இருவர் படுகாயப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் ஏறிக்கொண்டு தாவியவர், தவறி கூட்டத்தின் மேல் விழுந்து விட்டாராம்.

அவர் உட்பட காயம்பட்டோர் எல்லோரும் மாவட்ட மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டனராம்.

நகரசபைகள் பணம் தந்தால் திட்டம் நிறைவேற சர்க்கார் உதவுமாம்!

ஆந்திராவில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட தயாரிப்பு

கர்னூல், மே 5—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் எப்படித் தயாரிக்கப்பட வேண்டுமென்பதற்காக, 'மாதிரித் திட்டம்' ஒன்றைத் தயாரித்து எல்லா நகரசபைகளுக்கும் அனுப்பியுள்ளதாக ஸ்தலநிர்வாக இலாகா அதிகாரி ஏ. இராகவரெட்டி பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

நகரசபைகள், தாங்கள் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று விரும்பி தயாரித்து அனுப்புகிற திட்டங்களுக்கு செலவிடத் தேவையாகும் பணத்திற்கும் வழிவகைகளைக் கூற வேண்டும் என்றும் கோரப்பட்டிருக்கின்றனவாம்.

நகரசபைகள், தங்கள் திட்டத்திற்குத் தேவையான பணத்தைப் பெற்றுவிட முடியும் என்று சர்க்காருக்கு திருப்தியளிக்கும் வகையில் உறுதிதந்தால், திட்டத்தை நிறைவேற்றுவதில் சர்க்கார் உதவி புரியும் என்றும் கூறப்பட்டிருக்கிறதாம்

அனுப்பப்பட்டுள்ள 'மாதிரி'த் திட்டங்களை ஒட்டிய வழியில் நகரசபைகள் தங்கள் திட்டத்தைத் தயாரிக்காவிடில், வேறு வகைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட மாட்டா என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

'மாதிரித் திட்டத்'தில், சாக்கடை அமைத்தல், தண்ணீர் வசதி செய்தல், சாலை அமைத்தல், ஆரம்பப் பள்ளிகள் நிறுவுதல் முதலியன இடம் பெற்றுள்ளனவாம்.

துங்கபத்திரா அணை பிரதேசம்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு புதிய வீடுகள்

துங்கபத்திரா அணையின் காரணமாக வீடுகளை இழக்கும் 5,000 - குடும்பத்தினரை குடியமர்த்த 30 - 'மாதிரி கிராமங்கள்' தயாராகி விட்டனவாம்.

அணைக்கட்டினால் பாதிக்கப்பட்ட 37 கிராம மக்கள் இந்த 30 - மாதிரி கிராமங்களில் குடியமர்த்தப்படுகின்றனர்.

அநேகமாக எல்லோருமே புனரமைக்கப்பட்டு விட்டனர் என்று அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கோவில் இருக்கிறதாம். புதிய கிராமங்களில் 14 பள்ளிகளும். 13 பஞ்சாயத்துக்களும், 51 கிணறுகளும், 41 மத சம்மந்தமான கட்டிடங்களும் இருக்கின்றனவாம்

இப்புதிய கிராமங்கள் மூன்றில் மின்சார வசதிகள் அளிக்கப்படும் என்று தெரிகிறது.

இக்கிராமங்களை நிர்மாணிக்க அவைகளில் வாழப்போகும் மக்கள் தங்கள் உடல் உழைப்பையும் தந்து உதவினார்கள் என்று சொல்லப்படுகிறது.

கிராம மக்களுக்குத் தேவையான வீடு கட்டும் சாமான்களை முனிராபாத் அருகே உள்ள கூட்டுறவு வணிக நிலையம் ஒன்று தருகிறதாம். இதன் மூலம் சுமார் ரூ. 5 லட்சம் பெறுமான பொருள்கள் விற்பனை செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

ஆந்திர மந்திரி மரணம்

சென்னை, மே 5—

ஆந்திர மாநில விவசாய. உணவு இலாகா மந்திரி என். வி. ராமராவ் சென்னை பொது மருத்துவ மனையில் மாரடைப்பினால் காலமானார் என்று அறிவிக்கப்படுகிறது.

41 வயது மட்டுமே நிரம்பப் பெற்ற அவருக்கு மனைவியாரும், தாயாரும், சகோதரர்களும் இருக்கின்றனர்.

32 நாட்கள் மட்டுமே மந்திரியாக இருந்திருக்கிற அவர், சட்டசபை உறுப்பினராக 'பதவி உறுதிமொழி'கூட மேற்கொள்ளவில்லையாம்.

இருதய சம்மந்தமான நோய் சிகிச்சைக்காக சென்னை மருத்துவ மனையில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

திரு-கொச்சி தண்ணீர்

உபயோகித்துக் கொள்ள சென்னையின் முயற்சி

சென்னை, மே 5—

திரு-கொச்சி மாநிலத்தில் உபரியாகச் செல்லும் தண்ணீரை பயன்படுத்திக்கொள்வது பற்றி சென்னை மாநில சர்க்கார், திட்டக் குழுவிற்குச் சில யோசனைகள் தெரிவித்துள்ளனராம்.

மேற்படி தண்ணீரை உபயோகித்துக்கொள்ள மாநில சர்க்கார் விருப்பம் கொண்டுள்ளதென்றும், அவ்வாறு உபயோகிக்கப்படும் உபரித் தண்ணீரிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சார சக்தி முழுமையையுமே திரு-கொச்சி மாநில சர்க்காருக்குத் தந்துவிட சென்னை சர்க்கார் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளனராம்.

இந்த யோசனைகளில் திரு-கொச்சி உபரித் தண்ணீரைத் தேக்குவதற்கு திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் ஒரு அணையும், கோவை மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கருகில் ஒரு அணையும் கட்டலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இருதரப்பு எஞ்சினீயர்களும் அந்த இடங்களைப் பார்வையிட்ட பின்னரே அத்தகைய ஒரு ஏற்பாடு சாத்தியமாகும் என்றும் கூறப்படுகிறது

'வெட்கித் தலைகுனிய வேண்டும்'

முகம்மதலி மீது கண்டனம்

"ஆனந்தமாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த ஒரு பெண்ணின் குடும்பத்தை மற்றொரு பெண்மணியே சீர்குலைத்திருப்பது காண பெண் இனமே வெட்கித் தலைகுனிய வேண்டியதாயிருக்கிறது; பாகிஸ்தான் பிரதமரின் இரண்டாவது மனைவி அலியா சாதி, அவரது முதல் மனைவியான பேகம் அமீதாவின் இடத்தைப் பெறுவதை பாகிஸ்தான் பெண்கள் எந்த வகையிலும் அனுமதிக்கமாட்டார்கள்."

இவ்வாறு, அண்மையில் பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி இரண்டாவது திருமணம் செய்ததைக் கண்டித்து, அவரது முதல் மனைவிக்குக் கொடுக்கவேண்டிய உரிமையை திருப்பிக் கொடுக்காவிட்டால் பெருங் கிளர்ச்சி நடைபெறும் என்று எச்சரித்து, இங்கு புதிதாக நிறுவப்பட்டுள்ள மாதர் உரிமை சங்கத்தினர் நிறைவேற்றியுள்ள தீர்மானம் ஒன்றில் காணப்படுகிறது.

ஆக்கவேலைக்கு அணு சக்தி

அமெரிக்கா வெளிநாட்டுடன் செய்துகோள்ளும் முதல்ஒப்பந்தம்

அணு சக்தி மூலப் பொருளான யுரேனியத்தை துருக்கிக்கு இரவல் கொடுக்கவும், துருக்கியில் அணு சக்தி உலை நிறுவுவதற்கான தகவல்களைக் கொடுத்து உதவவும் அமெரிக்கா ஒப்பந்தம் செய்து கொண்டது எனத் தெரிய வருகிறது.

ஆக்க வேலைக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவதுபற்றி ஒரு வெளி நாட்டுடன் அமெரிக்கா செய்து கொள்ளும் முதல் ஒப்பந்தம் இது தானும்.

'அரசாங்கப் பிடியிலிருந்து!'

'கல்விக்கூடங்கள் விடுதலை பெற வேண்டும்'

மொரார்ஜி தேசாய் கருத்து

அகமதாபாத், மே 5—

"கல்வி நிலையங்கள் எல்லாம் அரசாங்கத்தின் பிடியினின்றும் விலகி சுதந்திரமாக இயங்க வேண்டும்," என்று பம்பாய் மாநில முதல் அமைச்சர் மொரார்ஜி தேசாய், கண்ணற்றோர் பள்ளிக் கட்டிடம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

"அளவுக்கு அதிகமான கட்டுப்பாடுகளும், விதிமுறைகளும் இருந்தால் கல்வியில் முன்னேற்றம் ஏற்படாது என்றும் அவர் கூறினார்.

அரசாங்க உதவியுடன் சமுதாயமே கல்விப்பொறுப்பை ஏற்று நடத்துமாறு அனுமதிக்க வேண்டும்," என்று அவர் விரும்பினார்; ஆனால், இந்த நிலைமைக்கு தற்போது ஏற்ற சூழ்நிலையில்லை என்பதை, தான் உணர்ந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

மாணவர் கிளர்ச்சி...

மைசூர் அரசாங்கம் பணிவு!

விடுமுறை பற்றிய புது உத்திரவு ரத்தாகிறது!

ஷிமோகா, மே 5—

மைசூர் மாநிலத்தில் நகரசபைப் பிரதேசங்களிலும், மாவட்ட தலைமை அலுவலகங்களிலும், நகரங்களிலும், தேவங்கரை, பத்ராவதி, கோலார் தங்கவயல் ஆகிய இடங்களிலுமுள்ள எல்லா பள்ளிக் கூடங்களிலும் கோடை விடுமுறையை ஜுன் 10-ந் தேதி முதல் 30-ந் தேதிவரை விடுவதற்குப் பதிலாக, மே 1-ந் தேதி முதல் 21-ந் தேதிவரை விட அனுமதித்து கல்வி இலாகா 'டைரக்டர்' உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிகிறது.

பள்ளி மாணவர்கள் தங்களின் பெற்றோர்களுக்கு விவசாய வேலைகளில் உதவியாயிருக்கலாம் என்ற நோக்கத்துடன் பெங்களூர் நகரசபை பகுதி நீங்கலாக மற்ற இடங்களில் உள்ள பள்ளிகளில் ஜுன் மாதத்தில் 20 நாட்களுக்கு கோடை விடுமுறை விடலாம் என்று கல்வி 'டைரக்டர்' உத்திரவிட்டிருந்தார்.

இதை எதிர்த்து, 'மே மாதத்திலேயே விடுமுறைவிட வேண்டு'மென்று மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

மைசூரில் உள்ள சுமார் 8 ஆயிரம் மாணவர்கள் தொடர்ந்து இன்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் நகரில் உள்ள பள்ளிகள் மூடப்பட்டிருந்தன; பள்ளிக் கூடங்களைச் சுற்றி பாரா போடப்பட்டிருந்தது.

ஷிமோகாவிலும் மாணவர்கள் வெளியேறி கோடை விடுமுறை கோஷங்கள் எழுப்பினராம்.

நாகரீகந்தானு?

வெள்ளையரல்லாதார் கல்வி பயிலுவதற்கென தென் ஆப்பிரிக்காவில் உள்ள போர்ட் ஹாரே எனுமிடத்தில் ஒரே ஒரு கல்லூரி தான் இருந்து வருகிறது. இந்தக் கல்லூரியையும் மூடிவிட கல்லூரி குழு முடிவு செய்திருக்கிறதாம்.

அந்தக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களிடையே ஒரு இரகசிய இயக்கம் நடந்து கொண்டிருப்பதாக தெரியவந்ததாலேயே கல்லூரி மூடப்படுவதாக சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

எதில்தான் இல்லை— இதில் இல்லாமலிருக்க?

செஞ்சீனப் பிரதமர் சூ-என்-லாய் 'நேரடிப் பேச்சு நடத்தத் தயார்' என்று கூறியதின் விளைவாக, நற்பலன் கிடைக்குமா என்று அமெரிக்க ராஜாங்க மந்திரி டல்லஸ் சந்தேகப்படுகிறாராம்!

கல்வி விழாவில் ரஷ்ய தலைவர் படங்கள்!

அகற்ற கே. டி. ராஜு ஒப்பம்

ஈரோடு, மே 5—

இந்நகர இரயில்வே காலனியில் உள்ள நகரசபைப் பள்ளியில் பெற்றோர் நாள் கொண்டாடப்பட்டது. விழா நடைபெற்ற இடத்தில் ரஷ்யத் தலைவர்களின் படங்கள் மாட்டப்பட்டிருந்தனவாம்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய ஈரோடு தாலுகா காங்கிரஸ் உப-தலைவர் ஆர். கே. வெங்கடசாமி அவர்கள், இந்த நிகழ்ச்சி கட்சிச் சார்பற்றது என்றும், அரசியலுக்கு இடமில்லாத எல்லோருடைய நலனையும் பொறுத்த கல்வி விழா என்றும் எடுத்துக்காட்டி, அங்கே மாட்டப்பட்டிருந்த ரஷ்யத் தலைவர்கள் படங்களை அகற்றுமாறு கூறினார்.

இந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த சென்னை சட்டசபை உறுப்பினரும், கம்யூனிஸ்டு கட்சியினருமான கே. டி. ராஜுவும், தலைவரின் கருத்தை ஆதரித்தாராம்.

இந்த நகரக் கல்லூரியில் உள்ள பேராசிரியர் இலக்குவனும் இக்கருத்தை ஆதரித்தார்.

அதன் பின்னர், ரஷ்யத் தலைவர்களின் படங்கள் அகற்றப்பட்டன.

கம்யூனிஸ்டு ஆட்சியில்!

மிராசுதாரர்களுக்கு அச்சம் இல்லையாம்!

கல்யாணசுந்தரம் பேச்சு

விக்ரமசிங்கபுரம், மே. 4—

"கம்யூனிஸ்டு ஆட்சி ஏற்பட்டால் தங்களுக்கு ஆபத்து ஏற்படும் என்று மிராசுதாரர்கள் நினைக்கிறார்கள்; அப்படி அவர்கள் பயப்பட வேண்டியதில்லை; அவர்களுக்குப் போதிய வசதி செய்யப்படும்,"

என்று, கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களில் ஒருவரான எம். கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ. பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"எல்லோருக்கும் நிம்மதியான வாழ்க்கை வேண்டுமென்பதற்காகத்தான் கம்யூனிஸ்டு கட்சி பாடுபடுகிறது; கம்யூனிஸ்டு ஆட்சி ஏற்பட்டால் நிலம் வைத்திருப்போருக்கு ஆபத்து வந்துவிடாது; நிலச் சீர்திருத்தத்தின் மூலம் அவர்கள் பயப்பட வேண்டியதில்லை," என்று அவர் மேலும் கூறியதாகத் தெரிகிறது.

'நில சீர்திருத்தம் உடனே வேண்டும்'

மணலி கந்தசாமி கோரிக்கை

கும்பகோணம், மே. 4—

"நில சீர்திருத்தத்தை எக்காரணத்தைக் கொண்டும் சர்க்கார் ஒத்திப்போடக் கூடாது; அவ்வாறு செய்தால் பலாத்காரப் புரட்சி ஏற்படும்; பொது மக்கள், தாங்களாகவே நிலங்களை எடுத்துக் கொள்ளும் காலம் வரும்."

என்று, கம்யூனிஸ்டு கட்சியினரான மணலி கந்தசாமி இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"நில சீர்திருத்தத்திலிருந்து தப்பித்துக்கொள்ள நலப் பிரபுக்கள் சூழ்ச்சி செய்து வருகிறார்கள்; 'நில சீர்திருத்தம் கொண்டுவந்தால் நாட்டின் முன்னேற்றம் பாதிக்கப்படும்,' என்று மாநாடு கூட்டி பெருநிலப் பிரபுக்கள் அலறியுள்ளனர்," என்று அவர் மேலும் குறிப்பிட்டாரெனத் தெரிகிறது.

இந்தியாவில், 1948-ல், 15,184 டன் காப்பி உபயோகிக்கப்பட்டது; 1954-ல், 20,000 டன் உபயோகிக்கப்பட்டிருக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு

இந்தியப் பொருள்கள் ஏற்றுமதி

சாத்தியக்கூறு பற்றி வர்த்தக நல்லெண்ணக் குழு

புதுடில்லி, மே 4—

மத்திய கிழக்கு நாடுகளுக்கு இந்தியாவில் உற்பத்தியாகும் பொருள்களை ஏற்றுமதி செய்வதில் அபிவிருத்தி ஏற்படக் கூடும் என்று அண்மையில் அந்த நாடுகளுக்குச் சென்றுவிட்டுவந்த நல்லெண்ண வர்த்தகத் தூதுக் குழு தெரிவித்திருக்கிறது.

குழு தாக்கல் செய்துள்ள தனது அறிக்கையில், அந்த நாட்டு மார்க்கெட்டுகளில் சாதாரண இலகு எஞ்சினியரிங் தொழில் சாமான்களுக்கு நேரிடையாகவே இடம் பிடிக்கலாமென்றும் கூறியிருக்கிறது.

'அத்தகைய உற்பத்தியான பொருள்களுக்குப் போட்டியிடுபவையாக மேற்கு ஐரோப்பிய நாட்டுப் பொருள்கள்தான் பெரும்பாலும் உள்ளன; எனவே, ஐரோப்பியப் பொருள்களின் விலையைக் காட்டிலும் நமது பொருள்களின் விலைகள் மிகக் குறைவாக இருந்தால்தான் விற்பனையாகும். விலைகள் குறைவாக இருப்பதைக் காட்டிலும் இன்னும் முக்கியமானது, மத்திய கிழக்கு நாடுகளின் வியாபாரிகளை வசீகரிக்கத்தக்க அதிகமான இலாபம் தர வேண்டும் என்பதாகும்' என்றும் குழு குறிப்பிட்டிருக்கிறது.

அங்கிங்கெனாதபடி எங்கும்!

ஈராக்கில் அமெரிக்க இராணுவ தளம் ஒன்று சீக்கிரமே அமைக்கப்படும் என்று ஒரு எகிப்திய பத்திரிகை கூறுகிறது.

மத்திய கிழக்குப் பிரதேசத்திற்கான அமெரிக்க இராணுவ அலுவலகத்தை ஈராக்கில் நிறுவ ஈராக் சர்க்கார் ஒப்பியுள்ளனராம்.

மிகப் பருமனான அரிசி மணிகள்!

பண்டித நேருவுக்குப் பரிசு

கல்கத்தா, மே. 5—

சாதாரணமான அரிசியின் பருமன் போன்று மூன்று மடங்கு பருமனான சில அரிசி மணிகளை பண்டித நேருவுக்கு ஐந்தாண்டுகளுக்கு முன், ஜப்பானில் உள்ள க்யோடோ பல்கலைக் கழகத்தைச் சார்ந்த டாக்டர் ஹொரா என்பவர் பரிசாகத் தந்திருக்கிறார்.

அவர் இந்த அளவு பருமனான அரிசியை, இந்தியா, ஜப்பான் நாடுகளில் விளையும் பல ரக அரிசிகளைக் கலந்து உருவாக்கியிருக்கிறார் என்று தெரிய வருகிறது.

இமாலயப் பிரதேசத்தில் இப்போது ஜப்பான் அரசாங்க ஆதரவுடன் ஒரு குழு, 'அரிசி முதன் முதலில் எப்போது கண்டுபிடிக்கப்பட்டு உபயோகத்திற்கு வந்தது?' என்பதை ஆராய முனைந்துள்ளதாம்.

ஆப்கானிஸ்தானில் இந்துகுஷ் மலையருகிலும், அவர்கள், அரிசியின் 'மூலம்' குறித்து ஆராய்ச்சி செய்வார்கள் என்று தெரிகிறது.

ஏன் விடுதலை செய்யக்கூடாது?

புதுடில்லி, மே. 4—

தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு இப்போது மணிப்பூர் சிறையில் காவலில் வைக்கப்பட்டுள்ள ம. சோ. கட்சித் தலைவர் டாக்டர் லோகியாவை ஏன் விடுதலை செய்யக்கூடாதென்பதற்குக் காரணம் காட்டும்படி இந்திய தலைமை உயர்நீதி மன்றம் மணிப்பூர் சர்க்காருக்கு 'நோட்டீஸ்' பிறப்பித்துள்ளது.

டாக்டர் லோகியாவின் நண்பர் ஒருவர் தாக்கல் செய்த 'ஹேபியஸ் கார்பஸ்' மனுவின்மீது இந்த நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டதாம்.

மே தின விழாக் கூட்டங்கள்

★

இராசபாளையம்

டாக்டர் அம்பேத்கார் திடலில் (அம்மன் பொட்டல்)

8—5—55 மாலை

பேசுவோர் :
தில்லை-வில்லாளன்
ப. க. பாண்டியன்

(அன்று மாலை 2 மணிக்கு மே தின விழா ஊர்வலமும் நடைபெறும்)

★

வேலூர் (வ. ஆ. மாவட்டம்)

8—5—55 மாலை 6 மணிக்கு

பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
ப. உ. சண்முகம்

★

குடந்தை

வெள்ளி விழா பூங்காவில்

8—5—55 ஞாயிறு மாலை

தலைவர் : சு. பத்மநாபன்

பேசுவோர் :
குடந்தை எஸ். ஆர். ராதா
பூங்கோதை
அருண்மொழி

★

வேலூர்

கோட்டை வெளியில்

8—5—55 மாலை 6 மணிக்கு

தலைவர் : மா. பா. சாரதி

பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
ப. உ. சண்முகம்
முல்லைசத்தி

★

மருதவல்லிபாளையம் (வ. ஆ.)

9—5—55

பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
முல்லைசத்தி

★

சந்தைபுதுப்பாளையம்

10—5—55

பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
முல்லை சத்தி

★

நன்னியூர்

7, 8—5—55 ஆகிய இரு நாட்களிலும் இவ்வூரில் மே தின விழாப் பொதுக்கூட்டங்கள் நடைபெறும். முதல் நாள் பொதுக் கூட்டத்தில் தோழர் டி. கே. கருப்பண்ணன் தலைமையில் தோழர் டி பி. மூர்த்தியும், மறுநாள் பொதுக் கூட்டத்தில், தோழர் வி. கே. ராஜு தலைமையில் தோழர் டி. ஆர். முத்துசாமியும் சொற்பொழிவாற்றுவர். இரு நாட்களிலும், இவ்வூர் தி. மு. கழகம், பகுத்தறிவு நாடக மன்றம் ஆகியவை சார்பில் 'மறுமணம்', 'பரப்பிரம்மம்'—நாடகங்கள் நடைபெறும்.

★

சத்தியவிசயநகரம்

7—5—55 காலை 9 மணிக்கு தோழர் சி செகதீசன் தலைமையில் சைக்கிள் ஊர்வலமும், இரவு 8 மணிக்கு கடைவீதியில் தோழர் பெ. திருநாவுக்கரசு தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெறும். தோழர்கள் மு. ந. இராமன், அ. பெ. சம்பத், டி. ஆர். செகதீசன், மற்றும் பலரும் சொற்பொழிவாற்றுவர்.

★

வட சென்னை

7—5—55 மாலை 6 மணிக்கு, இராயபுரம், மன்னர்சாமி கோவில் தெரு, எண் 59, குறள் நெறிக் கழக அறையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

★

செங்காட்டுப்பட்டி

8—5—55 மாலை, ஸ்ரீரங்கு பெருமாள் கோவில் திடலில், தோழர் அரு. ஆதிமூலம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் வி. அருணாசலம், பெ. மதுசூதனன், பெ. அரங்கசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

காஞ்சியில் மே விழா

பாராட்டும் வரவேற்பும்

8—5—55 காலை 7 மணிக்கு தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் தலைமையில் 'திராவிட நாடு' நிலையத்திலிருந்து சைக்கிள் ஊர்வலம் புறப்படும். ஊர்வலத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் காரில் அழைத்துவரப்படுவார். நகரின் பல முக்கிய இடங்களில் கொடியேற்றி வைப்பார்.

இரவு 10 மணிக்கு கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில் செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் கே. டி. எஸ். மணி தலைமையில், முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, முன்னாள் மாவட்டச் செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை, முன்னாள் நகரச் செயலாளர் இரா. வெங்கிடேசன் ஆகியோருக்குப் பாராட்டும், புதிய பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மாவட்டச் செயலாளர் கே. டி. எஸ். மணி ஆகியோருக்கு வரவேற்பும் காஞ்சி நகர தி. மு. கழகக் குழு அளிக்கும்.

★

திருப்பூர்

8—5—55-ல் திருப்பூர் நகர தி. மு. கழகம், தொழிலாளர் பகுத்தறிவுப் படிப்பகம் ஆகியவை சார்பில் நடைபெறவிருக்கும் மே தின விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர் டி. கே. சீனிவாசன் சொற்பொழிவாற்றுவார்.

★

கும்மிடிபூண்டி

8—5—55 மாலை 5 மணியளவில், கடைவீதியில், தோழர் ஈ எஸ். மணி தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. டி. டி. அரசு, வ. இராமநாதன், கலைமணி, சேரலாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். அன்று பிற்பகல் 2 மணியளவில் தோழர் ஆ பெ. கணேசன் தலைமையில் ஊர்வலம் நடைபெறும்.

★

குன்னத்தூர்

10—5—55 மாலை 7 மணிக்கு தேர்த் திடலில், தோழர் க. அன்பழகன் தலைமையில் நடைபெறும். தோழியர் அருண்மொழி, தோழர் கே. என். நடராசன், மற்றும் பலரும் சொற்பொழிவாற்றுவர்.

திருமணங்கள்

8—5—55 இரவு 9 மணியளவில், பம்பாய் காந்தாரியாசால், எண் 33 இல்லத்தில், தோழர் ஆரியசங்காரன்—தோழியர் சற்குணவதி அம்மையார் திருமணம், தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. எஸ். செல்லையா, மா. இரா. ஏ. இரத்தினசாமி, சு. வள்ளிநாயகம் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி சொற்பொழிவாற்றுவர். தோழர் ச. தர்மராசன் வரவேற்புரை நிகழ்த்துவார். இரவு 10-45 மணிக்கு இசை நிகழ்ச்சி.

* * *

8—5—55 காலை 8 மணிக்கு, சென்னை திருவொற்றியூர், சன்னதித் தெரு, எண் 12 இல்லத்தில் தோழர் கா அப்பாதுரை தலைமையில் தோழர் பலராமன்—தோழியர் சந்திரா திருமணம் நடைபெறும். தோழர்கள் எஸ். எஸ். தென்னரசு, முத்துராமன், தோழியர் அலமேலு அப்பாதுரை ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

புத்தர் ஆண்டு விழா

8—5—55 மாலை 5 மணிக்கு பெங்களூர் மக்கள் மறுமலர்ச்சி மன்றச் சார்பில், ராவ் பகதூர் ஆற்காடு நாராயணசாமி உயர்நிலைப் பள்ளி மைதானத்தில், தோழியர் எஸ் கே. செகதீசுவரி தலைமையில் 2499-வது புத்தர் ஆண்டு விழா நடைபெறும். தோழர்கள் ஜி. அப்பாதுரையார், எம் என். இராமசாமி சொற்பொழிவாற்றுவர்.

****** **************

மாநில மாநாட்டில் ஓவியக் கண்காட்சி

★

திருச்சியில் நடைபெறவிருக்கும் தி. மு. கழக மாநில மாநாட்டில் வழக்கம்போல் ஓவியக் கண்காட்சியும் இடம்பெற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஓவியக் கலைப் (சித்திரம் தீட்டும்) பயிற்சியில் தேர்ச்சியுள்ள தோழர்கள் தங்கள் தகுதியைக் குறிப்பிட்டு, "பொறுப்பாளர், 'நம் நாடு', இராயபுரம், சென்னை-13" என்ற முகவரிக்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

இம்முயற்சிகளில் பங்கு பெறும் தோழர்கட்கு உணவு வசதி, தங்கும் இட வசதி மட்டுமே செய்துகொடுக்கப்படும். பொருள் ஊதியம் கொடுப்பதற்கில்லை.

விண்ணப்பங்கள் கிடைத்த பிறகு, குறிப்பிட்ட இடத்திற்கு வரும்படி கடிதம் எழுதப்படும். அதுசமயம் வரும்படி வேண்டிக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்,
'நம் நாடு', சென்னை-13

****

சபைத் தலைவர்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சர்க்கார் தரப்பைச் சேர்ந்த 10 லிபரல் கட்சி உறுப்பினர்களும், வேறு ஒரு கட்சி உறுப்பினரும் தலைவரின் முடிவிற்கு எதிராக எதிர்க் கட்சியினருடன் சேர்ந்து வாக்களித்திருக்கின்றனர்.

"சபைத் தலைவரின் முடிவு சரியானதுதானா என்று பார்ப்பதில், தனக்குரிய உரிமையை தானே சபை மறுத்து விடுமானால், அது ஒரு ஆபத்தான முன்மாதிரியாகி விடக்கூடும்," என்று, ராபர்ட் மெகிங் என்ற தொழிற் கட்சி உறுப்பினர் கூறியிருக்கிறார்.

பின்னர், தொழிற் கட்சிக்குள் விவாதம் நடைபெற்று, சபைத் தலைவரின் முடிவை ஏற்றுக்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டதும் டாக்டர் ஈவாட், எட்வர்ட் வார்டு தொடர்ந்து பேச அனுமதிக்கப்பட வேண்டும் என்று கொண்டு வந்த பிரரேபணையை சபை தள்ளுபடி செய்தது.

"கடந்த நாளன்று சபையில் நடைபெற்ற சம்பவங்கள், மக்கள் சபைக்கு அவமானத்தைத் தேடிக்கொண்டுவந்திருக்கிறது," என்று பிரதம மந்திரி ராபர்ட் மென்சீஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

"சபைத் தலைவரின் போக்கு பொறுக்க முடியாத அளவு அநியாயமானதாயிருக்கிறது என்று இங்குள்ளோர் கருதியதின் விளைவுதான் நேற்றைய சம்பவங்கள்," என்று டாக்டர் ஈவாட், பிரதமர் குறிப்புக்கு பதில் சொல்லியிருக்கிறார்.

மட்சு, குமாய் தீவுகளை கைப்பற்றித் தேவையான துருப்புகளை விட அப்பகுதி அருகே அதிகமான துருப்புகளை செஞ்சீனா குவித்தால், 'செஞ்சீனா விரிவான முறையில் தாக்குதல் நடத்தப்போவதாக அமெரிக்கா கருதும்' என்று ஜனாதிபதி ஐசனோவர் இன்று கூறினார்.

திருத்தம்

சென்னை 4—5—55 'நம் நாடு' இதழ் முதற் பக்கம், மேல் பகுதியில் வெளியிடப்பெற்ற செய்தியில் 'முத்தத்தின் விலை 6 மாத சிறை' என்ற தலைப்பினை 'முத்தத்தின் விலை 6 வார சிறை' என்று திருத்தி வாசித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். (ஆ-ர்.)

B. சுப்பராயன் உயர்தர இலவசப் பள்ளி வளர்ச்சி நிதிக்காக
வண்ணைப்பதி தியாகராய கல்லூரி கலா மண்டபத்தில்
8—5—55 ஞாயிறு மாலை 6-30 மணியளவில்
அண்ணா தலைமையில்
'வளையாபதி' ஜி. முத்துக்கிருஷ்ணன், டி. வி. வேலைய்யா, ஏ. என். கிருஷ்ணன், பொன்னப்பா, சின்னையன், பெ. தா. இன்மொழியன், ஜே. எஸ். ராஜன், எஸ். எம். சின்னப்பா, சி. எஸ். மோகன், ஆர். லலிதா, டி. இந்திரா, எஸ். வி. வசந்தா ஆகியோர் நடிக்கும்
ஆர். ஜார்ஜ் தீட்டிய
'இலட்சியக் கனவு'
(கற்பனை கலந்த சரித்திர நாடகம் நடைபெறும்.)
*
டைரக்ஷன் : ஈ. டி. மூர்த்தி — இசையமைப்பு : புகழேந்தி
தயாரிப்பு : எஸ். எம். துரைராஜ்
கட்டணம் : ரூ. 5, 2, 1 அணா 8

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

(நீலகிரி மாவட்டம்)

மே 7 : கொல்லக்கொம்பை —தி மு க. ஆண்டுவிழா)
8 : உதகை (நீலகிரி)
9 : நான்சச்
10 : குன்னூர் (மே விழா)
13 : சென்னை
14, 15 : பெங்களூர் —குறள் மாநாடு

சென்னை—நாளை தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

"8—5—55 காலை 10 மணியளவில், கழக மனையில், செயற்குழுக் கூட்டம் நடைபெறும். கழக வரவு-செலவு, ஆண்டு விழா, இதர சில பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும்" என்று செயலாளர் மு கன்னியப்பன் அறிவிக்கிறார்.

14-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர்கட்கு

"சென்னை—14-வது வட்டக் கிளைச்செயலாளர் கோ. செங்குட்டுவன், மாவட்டத் துணைச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதையொட்டி, கிளைக் கழகச் செயலாளர் பொறுப்பினின்றும் விலகிக்கொண்டதால், 8—5—55 காலை 10 மணிக்கு கழகக் கட்டிடத்தில் புதிய கிளைக் கழகச் செயலாளர் தேர்ந்தெடுக்கப்படுவார்" என்று மேற்படி வட்டத் துணைச் செயலாளர் தோழர் தி. ம பாலகிருஷ்ணன் அறிவிக்கிறார்.

சென்னை 4-வது வட்ட தி. மு. கழக நிர்வாக உறுப்பினர்கட்கு

8—5—55 காலை 9 மணிக்கு 112, சோலையப்பன் தெரு, கலைவாய் இல்லத்தில் கழக நிர்வாக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அதுபோது கழகத்தின் முக்கிய வேலைகள் குறித்து ஆராயப்படும்.

தொழிலாளரே 'முதலாளி'களாயுள்ள தொழிற்சாலை

காமராசர் திறந்து வைத்தார்

தலைச்சேரி, மே 5—

தொழிலாளர்களே தொழிற்சாலையின் . சொந்தக்காரர்களாக உள்ள 'கௌசல்யா நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்' என்ற சங்கத்தை கண்ணனூருக்கு அருகில் 6 கல் தொலைவில் உள்ள தொட்டடாவில் மாநில முதலமைச்சர் காமராசர் திறந்து வைத்தார்.

இதுபோன்று அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கம் இந்தியாவிலேயே இதுதான் முதன்முதலானது என்றும், தொழிலாளர்களையே தொழிற்சாலைகளின் சொந்தக்காரர்களாக்கும் அக்கூட்டு முயற்சியைத் தாம் மனதார வாழ்த்துவதாகவும் அவர் கூறினார்.

காலவரையறையை ஒத்திப் போட!

காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்

இந்தி மொழியை அரசாங்க மொழியாக்குவதை மேலும் 10 - ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்க வேண்டுமென்று—அதாவது இந்தி அமுலுக்கு வருவதை 15 ஆண்டிலிருந்து 25 ஆண்டுகட்கு நீடிக்க வேண்டுமென்று, அகில இந்திய காங்கிரஸ் குழுக் கூட்டத்தில் தமிழ் நாட்டு உறுப்பினர் தேவநாதன் என்பவர் தீர்மானம் ஒன்று கொண்டுவர இருப்பதாகக் கூறப்படுகிறது.

தென் பகுதி இரயில்வேமென் யூனியன் பொதுக்குழு

"தென் பகுதி இரயில்வேமென் யூனியன், சென்னைக் கிளையின் பொதுக்குழு, 8—5—55 மாலை 6-30 மணிக்கு, சென்னை, சைதாப்பேட்டை, கடைத்தெரு 101 எண்ணுள்ள இல்லத்தில், செங்கல்பட்டு கிளைத்தலைவர் திரு. கே. இராமச்சந்திரன் தலைமையில் கூடும். அவ்வமயம், 1955—56-ம் ஆண்டிற்கான நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்" என்று அறிவிக்கப்படுகிறது.

கூறைநாடு மனோன்மணீயம் சுந்தரம் நினைவுப் பேரவை அமைப்புக் கூட்டம்

8—5—55 மாலை 3 மணியளவில் மயிலாடுதுறை கூறைநாடு வாத்தியக்காரத் தெரு, துவக்கப் பள்ளியில், பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் நினைவுப் பேரவை அமைப்புக்கூட்டம், தோழர் க. அறிவழகன் தலைமையில் நடைபெறும். கூட்ட நிகழ்ச்சிகளுக்குப் பின்னர், திரு ச சேதுசுப்பிரமணியம் சொற்பொழிவாற்றுவர்.

திரு. வி. க. மணி மண்டப நிதி அளிப்பு விழா

8—5—55 காலை 9 மணிக்கு, திருப்பத்தூர் நியூ சினிமா தியேட்டரில், திருப்பத்தூர் பகுத்தறிவு மன்றச் சார்பில், மேற்படி மண்டப நிதி அளிப்பு விழா நடைபெறும். மன்றச் சார்பில் தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களிடம் ரூ. 101 பண முடிப்பு அளிக்கப்படும். தோழர் இ. எல். இராசவனூர் தலைமையில், தோழர்கள் கி. ஆ. பெ. விசுவநாதம், டி. இராமசாமி, கண்ணதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ, அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.